CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No. 6 1/B, Layards Road, Colombo 05. **Tel:** +94112584047 / +94114503001
**Fax:** +94112584047 **E-mail:** cmev@cpalanka.org **Web:** www.cmev.org

**மாற்று கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து எதிர் நிமல் ஜி. புஞ்சிஹேவா, தலைவர் - தேர்தல் ஆணைக்குழு மற்றும் ஏனையோர்**

உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவதற்குத் தவறிய மற்றும்/ அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மறுத்த அரச திணைக்களங்களை சவாலுக்குட்படுத்தும் வகையில் 2023 பெப்ரவரி 28ந் திகதி அன்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளரினால் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டது. CPA ஆனது, தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) அங்கத்துவராகவும் அதன் செயலகமாகவும் தொழிற்பட்டு வருகின்றது.

உரிய சட்டங்களுக்கு அமைய ஒவ்வொரு 4 வருடங்களுக்கு (48 மாதங்கள்) ஒருமுறை இலங்கையின் உள்ளூராட்சி சபைகளுக்கு உரியவர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தலானது நடத்தப்பட வேண்டும். முன்னர் இதற்கான தேர்தல் 2018ல் நடாத்தப்பட்டிருந்தது, அவ்வுள்ளூராட்சி சபைகளுக்கான காலம் 2022 ஆம் ஆண்டுடன் முடிவுற்ற போதிலும் மேலும் ஓராண்டு காலம் நீட்டிக்கப்பட்டிருந்த போதிலும் அக்காலப்பகுதி மிக விரைவில் நிறைவடைய இருக்கின்றது, அதன்பின்பும் நீடிக்க சட்டத்தில் வேறெந்த வழிவகைகளுமில்லை.

2023 ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி அன்று, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 09ம் திகதி மார்ச் 2023 அன்று நடத்தப்படும் என பிரகடனப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும், உரிய நிதி வழங்கப்படவில்லையாயின், தபால் மூல வாக்கெடுப்பிற்கு தேவையான வாக்குச்சீட்டுக்களை அச்சடிக்க இயலாது என அரச அச்சகம் அறிவித்ததாக 13ம் திகதி மார்ச் 2023 அன்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது. தேவையான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாததன் காரணத்தினால் வாக்குச்சீட்டுக்களை அச்சடிக்க முடியாது என அரச அச்சகம் குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரச அச்சகம் மற்றும் பொலிஸ் மா அதிபரின் இச்செயற்பாடுகள், உள்ளூராட்சி சபை தேர்தலினை ஒத்திவைப்பதற்காக நடாத்தும் ஒன்றிணைந்த நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுவதாக மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர். இதேவேளை, தேர்தலை நடாத்துவதற்கான நிதியை ஒதுக்குவதில் உள்ள சவாலை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும், திறைசேரியின் செயலாளரும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 23ந் திகதி இறுதி

நொடி வரை சுட்டிக்காட்டவில்லை எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். இது மனுதாரர்கள் மற்றும் இலங்கை குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதகம் விளைவிக்கும் நடவடிக்கைகள் ஆகும்.

ஒரு நாடு ஜனநாயக நாடாக இருப்பதற்கும், இலங்கை ஜனநாயக குடியரசாக திகழ்வதற்கும் சட்டத்தின் தேவைக்கிணங்க தேர்தலை நடாத்துவது அத்தியாவசியம் என மனுதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்கும் முடக்குவதற்கும் நடைபெறும் முயற்சிகளினால் அரசியலமைப்பு சட்டத்தின் 10, 12(1) மற்றும் 14(1)(a) ஆம் பிரிவுகளின் கீழான தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அல்லது தொடர்ச்சியாக மீறப்படுவதாகவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



***கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து***
*இணை-அழைப்பாளர்*